**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 3.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஜெயலட்சுமி. | ஜாதி | |
| கணவர் பெயர் | காமாட்சி. | தொழில் | இல்லத்தரசி. |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 60/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, இல்லத்தரசியாக வசித்து வருகிறேன்.. அ.சா.1 என் மருமகள். அ.சா.2 என் மகன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். எதிரிகள், நாங்கள் நடக்கும் பாதையை மறைத்தபடி சுவர் கட்டியிருந்தார்கள். அதை எதிரிகளிடம் அகற்றும்படிக் கேட்டபோது, அதை எதிரிகள் அகற்றவில்லை. அதனால் நாங்கள் நகராட்சியில் இதுபற்றித் தெரிவித்தோம். கடந்த 20.04.2018 ஆம் தேதியன்று, நகராட்சியிலிருந்து வந்து, மேற்படி சுவரை அகற்றிவிட்டார்கள். அன்றைய தினமே, இரவு 08.00 மணிக்கு எங்களது வீட்டின் முன்பாக, நானும், எனது மருமகள் மற்றும் குழந்தை வீட்டிலிருந்தபோது, எதிரிகள் இருவரும் எப்படி சுவரை இடிக்க வைக்கலாம் என்று சொல்லி, கல்லால் எறிந்தார்கள். நாங்கள் கதவை சாத்திக்கொண்டோம். எதிரிகள் எறிந்த கல் பட்டு, எங்கள் வீட்டுக் கதவு உடைந்தது. எதிரிகள் இருவரும் கத்தி மற்றும் அரிவாள் மனையை எடுத்துவந்து, உங்களைக் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டினார்கள். எனது மகனும், எனது கணவரும் வந்தபின்னர், சம்பவம் குறித்து அவர்களிடம் தெரிவித்துவிட்டு, காவல் துறைக்குச் சென்று புகார் கொடுத்தோம். அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாகக்கூறும் நேரத்தில், எங்களது வீட்டின் அருகில் ஊர்ப் பெரியவர்கள் இருந்தார்களா? என்றால், இல்லை. சம்பவ சமயத்தில் என் கணவர் எங்கிருந்தார் என்றால், அவர் வெளியில் சென்றிருந்தார். என் கணவரும், எத்தனை மனைக்கு வீட்டிற்கு வந்தார் என்றால், இரவு 09.00 மணியைப்போல் வந்திருப்பார்கள். என் கணவரும், எத்தனை மனைக்கு வீட்டிற்கு வந்தார் என்றால், என் கணவர் வந்த, கொஞ்நேரம் கழித்து வந்தார். புகார் கொடுக்கச் சென்றபோது, நான் உடன் சென்றேனா? என்றால், காவல் நிலையத்திற்குச் சென்றேன். எத்தனை மணிக்குச் சென்றேன் என்றால், 10.00 மணிக்குச் சென்றேன். புகாரை யார் எழுதியது என்றால், ஞாபகமில்லை. எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையே இருந்த நிலப் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, எதிரிகள்மீது பொய்யாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் இருவரும், என்னையும், என் மருமகளையும் பார்த்து, அசிங்கமாகப் பேசி, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.16 20:51:47 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**